# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 186/மா/2024**

**நாள்: 07.07.2025**

| | | |
|---|---|---|
| திரு. சாஜாகுணா<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர்,<br>மண்டலம்–5<br>பெருநகர சென்னை மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 026, வடபழனி, கங்கையம்மன் காலனி, 2வது தெரு, கதவு எண் 1/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சாஜாகுணா என்பவரின் 06.09.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.09.2024 அன்று பெறப்பட்டு 186/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 026, வடபழனி, கங்கையம்மன் காலனி, 2வது தெரு, கதவு எண் 1/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சாஜாகுணா என்பவர் தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "பொதுக் கட்டிட விதிகள் சட்டத்தை மீறியும் சென்னை மாநகராட்சி கட்டிட விதிமுறைகளை மீறியும் தொழிலாளர்கள் சட்ட விதிமுறைகளை மீறியும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் விதிமுறைகளுக்கு முற்றிலும் மாறாக எவ்வித பாதுகாப்பு வசதிகளும், வாகன நிறுத்தங்களும் இல்லாமல் குடியிருப்பு கட்டிடத்தில் தாய்மொழியான தூய தமிழில் பெயர்ப் பலகை வைக்காமலும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு 63, எழும்பூர் வட்டம், எழும்பூர் 2 வருவாய் கிராமம், பகுதி எண் 44, நகர புல எண் 1193/2 கதவு எண் 62, தெற்கு கூவம் சாலை, புதுப்பேட்டை, சென்னை 600 002 என்ற முகவரியில் சுமார் 4000 சதுரடியில் தரை தளம் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் இரும்புத் தகடுகள் வேயப்பட்டு மேற்கண்ட குடியிருப்புக் கட்டிடத்தில் பெருவணிகத்தை நடத்தி வரும் விதிமீறல் கொண்ட அடுக்கு மாடி சட்ட விரோத கட்டிடத்தின் மீதும், அதற்கு வழங்கப்பட்டிருக்கும் மின் இணைப்பு, குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு, வரி மதிப்பீடு, திட்டஅனுமதி, கட்டிட பணி நிறைவுச் சான்று மற்றும் நிறுவனங்களுக்கு சட்ட விரோதமாக வழங்கப்பட்டுள்ள தொழில் உரிமம், தொழில் வரி, சரக்கு மற்றும் சேவைவரி பதிவு எண், வணிக வரி, தமிழ் வளர்ச்சித் துறையின் தடையின்மைச் சான்று, சுகாதாரச் சான்று, கட்டிட உறுதிச் சான்று, தீ தடுப்பு சான்று, போக்குவரத்து காவல்துறையின் தடையின்மை சான்று, தொழிலாளர் நலத் துறையின் தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சான்றுகள், எடை மற்றும் முத்திரைச் சான்றுகள் உள்ளிட்டவற்றை ரத்து செய்வதுடன் மாநகராட்சி சாலையை ஆக்கிரமித்து இயங்கி வரும் சட்ட விரோத குடியிருப்பு கட்டிடத்தை ஏற்கனவே மூடி முத்திரையிடப்பட்டிருந்த நிலையில் மீண்டும் சட்ட விரோதமாக குடியிருப்பு கட்டிடத்தை வணிகக் கட்டிடமாக எவ்வித விதிமுறைகளையும் பின்பற்றாமல்

பக்கவாட்டு இடம் விடப்படாமல் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமனம் செய்து மாநகராட்சியால் ஏற்கனவே மூடி முத்திரையிடப்பட்ட சட்ட விரோத குடியிருப்புக் கட்டிடத்தின் மீதும், விதிமீறல் கொண்ட குடியிருப்பு கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டிருந்தால் கட்டிட பணி நிறைவுச் சான்று வழங்கப்பட்டிருந்தால் கள ஆய்வு செய்து அனைத்தையும் ரத்து செய்வதுடன், விதிமீறல் குடியிருப்பு கட்டிடத்தை நிரந்தரமாக இடித்து அப்புறப்படுத்துவதுடன் சட்ட விரோத கட்டிடத்தில் இயங்கி வரும் வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் தடையின்மைச் சான்றுகள் உரிமைச் சான்றுகள் உள்ளிட்ட அனைத்தும் துறை ரீதியாக ரத்து செய்வதுடன் சட்ட விரோதமாக தடையின்மைச் சான்றுகள், உரிமைச் சான்றுகள் வழங்கிய அதிகாரிகளின் பணி விவரப் பதிவேடுகளை ஆய்வு செய்து துறை ரீதியாக நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன். சம்மந்தப்பட்ட துறைகள் பொதுமக்களின் நலன் கருதி கள ஆய்வு செய்து உறுதிபடுத்த வேண்டுகிறேன்.

ஏற்கனவே, மாநகராட்சியில் மூடி முத்திரையிடப்பட்ட சட்ட விரோத குடியிருப்புக் கட்டிடத்தில் செயல்படும் வணிக நிறுவனங்களில் பணி செய்து வரும் தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பு, பணி மேம்பாடு செயல்படுத்தப்படுகிறதா? தொழிலாளர் விடுமுறை தொடர்பான அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளதா? காற்றோட்ட வசதி, கழிப்பிட வசதி, சுத்திகரிக்கப்பட்ட தூய குடிநீர் வசதி, மற்றும் 8 மணி நேர பணி உறுதி, தொழிலாளர்களுக்கு முறையான தொழிலாளர் வைப்புநிதி, தொழிலாளர் மருத்துவக் காப்பீடு, குழுக் காப்பீடு ஆகியவை வழங்கபட்டுள்ளதா? தொழிலாளர்களின் வருகைப் பதிவேடு, சம்பளப் பதிவேடு விபத்துப் பதிவேடு, பதவி நிலை பதிவேடு உள்ளிட்ட பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா இதை அவ்வப்போது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் ஆய்வு செய்கிறதா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 14.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையர் தனது கடிதம் எண்.8789/2024, நாள் 22.04.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, வார்டு 63க்கு உட்பட்ட எண் 62/91, தெற்கு கூவம் சாலையில் உள்ள கட்டிடமானது கட்டிட அனுமதி இல்லாமல் கட்டப்பட்டு வந்ததால் இக்கட்டிடத்திற்கு 12.06.2015 அன்று வேலை நிறுத்த தாக்கீதும் 29.06.2015 அன்று பூட்டி சீல் வைக்கும் தாக்கீதும் வழங்கப்பட்டு 20.08.2015 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது.

வீட்டின் உரிமையாளர் தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் 21.07.2016 அன்று மேல்முறையீடு மனு சமர்ப்பித்து அதன் மீது கீழ்க்கண்ட ஆணை பெறப்பட்டது.

> "In the above circumstances, the Government after careful consideration of the fact, the appeal of the petitioner cannot be accepted, as no setbacks have been provided in the building. Further, the petitioner is directed to submit demolition plan to the Corporation and obtain fresh planning approval and then construct the building. Accordingly, the appeal is disposed off".

அதன்படி கட்டிட உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சியில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் 01.12.2016 அன்று சீல் திறந்து விடப்பட்டது.

மேலும், 20.11.2024 அன்று இக்கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு, இக்கட்டிட உரிமையாளருக்கு கட்டிட குறைபாடுகளை குறிப்பிட்டு இதற்கான விளக்கத்தினையும், இக்கட்டிடத்தின் மீது ஏன் நடவடிக்கை எடுக்க கூடாது என்பதற்கான விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த தாக்கீதின் தொடர்ச்சியாக மேல்தளத்தில் வேயப்பட்டிருந்த சீட் முழுவதுமாக அகற்றப்பட்டது. சீட் முழுவதுமாக அகற்றப்பட்டதால் மனுதாரர் திரு சாஜாகுணா அவர்கள் அளித்த புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்தார். அதன்படி புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொண்டார். எனவே, புகார் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 02.06.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.05.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5-ன் உதவிப் பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 02.06.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, வார்டு 63க்கு உட்பட்ட எண் 62/91, தெற்கு கூவம் சாலையில் உள்ள கட்டிடமானது கட்டிட அனுமதி இல்லாமல் கட்டப்பட்டு வந்ததால் இக்கட்டிடத்திற்கு 12.06.2015 அன்று வேலை நிறுத்த தாக்கீதும் 29.06.2015 அன்று பூட்டி சீல் வைக்கும் தாக்கீதும் வழங்கப்பட்டு 20.08.2015 அன்று பூட்டி சீல்வைக்கப்பட்டது.

வீட்டின் உரிமையாளர் தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் 21.07.2016 அன்று மேல்முறையீடு மனு சமர்ப்பித்து அதன் மீது கீழ்க்கண்ட ஆணை பெறப்பட்டது.

"In the above circumstances, the Government after careful consideration of the fact, the appeal of the petitioner cannot be accepted, as no setbacks have been provided in the building. Further the petitioner is directed to submit demolition plan to the Corporation and obtain fresh planning approval and then construct the building. Accordingly, the appeal is disposed off"

அதன்படி கட்டிட உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சியில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் 01.12.2016 அன்று சீல் திறந்து விடப்பட்டது.

மேலும், 20.11.2024 அன்று இக்கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு, இக்கட்டிட உரிமையாளருக்கு கட்டிட குறைபாடுகளை குறிப்பிட்டு இதற்கான விளக்கத்தினையும், இக்கட்டிடத்தின் மீது ஏன் நடவடிக்கை எடுக்ககூடாது என்பதற்கான விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த தாக்கீதின் தொடர்ச்சியாக மேல்தளத்தில் வேயப்பட்டிருந்த சீட் முழுவதுமாக அகற்றப்பட்டது. சீட் முழுவதுமாக அகற்றப்பட்டதால் மனுதாரர் திரு சாஜாகுணா அவர்கள் அளித்த புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்தார். அதன் நகலினை இம்முறை மன்ற நடுவர் முன்பு சமர்ப்பிக்கிறேன்.''

6. மனுதாரர் தன்னுடைய மனுவில், சென்னை, புதுப்பேட்டை, வார்டு எண் 63, பகுதி எண் 44, நகர புல எண் 1193/2, தெற்கு கூவம் சாலை, கதவு எண் 62-ல் உள்ள கட்டிடத்தின் மீது பல கடுமையான புகார்களை தெரிவித்துவிட்டு, இம்முறைமன்ற நடுவத்திற்கு எவ்வித தகவலும் தெரிவிக்காமல், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5-ன் உதவிப் பொறியாளருக்கு 12.02.2025 நாளிட்ட கடிதத்தில் தன் மனுவின் மீது சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டதால், தான் அளித்த புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்தது, உரிமையியல் நீதிமன்ற அந்தஸ்து கொண்ட இம்முறைமன்ற அழைப்பாணையை ஏற்று விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்தது, மனுதாரருக்கு வேறு ஏதோ உள்நோக்கம் இருப்பதாக இம்முறைமன்ற நடுவம் கருதி, தன்னுடைய கடுமையான அதிருப்தியையும், கண்டனத்தையும் பதிவு செய்கிறது. மேலும் மனுதாரரின் 12.02.2025 நாளிட்ட கடிதத்தை ஏற்க இயலாது.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், பொதுக் கட்டிட விதிகள் சட்டத்தை மீறியும் சென்னை மாநகராட்சி கட்டிட விதிமுறைகளை மீறியும் தொழிலாளர்கள் சட்ட விதிமுறைகளை மீறியும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் விதிமுறைகளுக்கு முற்றிலும் மாறாக எவ்வித பாதுகாப்பு வசதிகளும், வாகனம் நிறுத்துவதற்கான வசதிகளும் இல்லாமல் குடியிருப்பு கட்டிடத்தில் தாய்மொழியான தூய தமிழில் பெயர்ப் பலகை வைக்காமலும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு 63, எழும்பூர் வட்டம், எழும்பூர் 2 வருவாய் கிராமம், பகுதி எண் 44, நகர புல எண் 1193/2 கதவு எண் 62, தெற்கு கூவம் சாலை, புதுப்பேட்டை, சென்னை 2 என்ற முகவரியில் சுமார் 4000 சதுரடியில் தரை தளம் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் இரும்புத் தகடுகள் வேயப்பட்டு மேற்கண்ட குடியிருப்புக் கட்டிடத்தில் சட்ட விரோதமாக அடுக்குமாடி கட்டிடம் கட்டி வணிக தளமாக செயல்பட்டு, பெருவணிகத்தை நடத்தி வரும் அக்கட்டிடத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் மின் இணைப்பு, குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு, வரி மதிப்பீடு, திட்டஅனுமதி, கட்டிட பணி நிறைவுச் சான்று மற்றும் நிறுவனங்களுக்கு சட்ட விரோதமாக வழங்கப்பட்டுள்ள தொழில் உரிமம், தொழில் வரி, சரக்கு மற்றும் சேவைவரி பதிவு எண், வணிக வரி, தமிழ் வளர்ச்சித் துறையின் தடையின்மைச் சான்று, சுகாதாரச் சான்று, கட்டிட உறுதிச் சான்று, தீ தடுப்பு சான்று, போக்குவரத்து காவல்துறையின் தடையின்மை சான்று, தொழிலாளர் நலத் துறையின் தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சான்றுகள், எடை மற்றும் முத்திரைச் சான்றுகள் உள்ளிட்டவற்றை ரத்து செய்வதுடன் மாநகராட்சி சாலையை ஆக்கிரமித்து இயங்கி வரும் சட்ட விரோத குடியிருப்பு கட்டிடத்தை வணிகக் கட்டிடமாக எவ்வித விதிமுறைகளையும் பின்பற்றாமல் பக்கவாட்டு இடம் விடப்படாமல் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ள விதிமீறல் கட்டிடத்தை நிரந்தரமாக அப்புறப்படுத்துவதுடன், அவ்வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் தடையின்மைச் சான்றுகள் உரிமைச் சான்றுகள் உள்ளிட்ட அனைத்தும் துறை ரீதியாக ரத்து செய்வதுடன் சட்ட விரோதமாக தடையின்மைச் சான்றுகள், உரிமைச் சான்றுகள் வழங்கிய அதிகாரிகளின் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது அறிய முடிகிறது.''

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, வார்டு 63க்கு உட்பட்ட எண் 62/91, தெற்கு கூவம் சாலையில் உள்ள கட்டிடமானது கட்டிட அனுமதி இல்லாமல் கட்டப்பட்டு வந்ததால் இக்கட்டிடத்திற்கு 12.06.2015 அன்று வேலை நிறுத்த தாக்கீதும் 29.06.2015 அன்று பூட்டி சீல் வைக்கும் தாக்கீதும் வழங்கப்பட்டு 20.08.2015 அன்று பூட்டி சீல்வைக்கப்பட்டது எனவும், வீட்டின் உரிமையாளர் தமிழ்நாடுஅரசின் வீட்டு வசதிமற்றும் நகர்ப்புறவளர்ச்சித்துறையில் 21.07.2016 அன்று மேல்முறையீடு மனு சமர்ப்பித்து அதன் மீது பெறப்பட்ட ஆணையின்படி, கட்டிட உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சியில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் 01.12.2016 அன்று சீல் திறந்து விடப்பட்டது எனவும், மேலும், 20.11.2024 அன்று இக்கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு, அதன்படி மேல்தளத்தில் வேயப்பட்டிருந்த சீட் முழுவதுமாக அகற்றப்பட்டது என்றும், சீட் முழுவதுமாக அகற்றப்பட்டதால் மனுதாரர் திரு.சாஜாகுணா அவர்கள் அவர் அளித்த புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளதை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளருக்கு முகவரியிட்ட 12.02.2025 நாளிட்ட கடிதத்தில், தன் மனு மீது சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் நடவடிக்கை எடுத்ததினால், புகாரினை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்ததை இம்முறைமன்ற நடுவம் ஏற்காத நிலையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண்.63–ல் அமைந்துள்ள கட்டிடம் கதவு எண் 62/91–ன் உரிமையாளர்,

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் அலுவலகத்தால் வழங்கப்பட்ட தாக்கீது தொடர்பாக, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் 21.07.2016 அன்று மேல்முறையீடு மனு சமர்ப்பித்ததன் அடிப்படையில் "the appeal of the petitioner cannot be accepted, as no setbacks have been provided in the building. Further, the petitioner is directed to submit demolition plan to the Corporation and obtain fresh planning approval and then construct the building" என்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறத் துறை ஆணையிட்டவாறு, கட்டிட உரிமையாளர் கட்டிடத்தினை இடிப்பதற்கும், புதிய கட்டிடத்திற்கான வரைபடமும் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் சமர்ப்பித்த ஆவணங்கள், இம்முறைமன்ற நடுவம் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. கட்டிட உரிமையாளர் கட்டிடத்தின் மேல்தளத்தில் வேயப்பட்டிருக்கும் சீட் அகற்றப்பட்டதும் மனுதாரர் தன்னுடைய புகாரினை திரும்ப பெற்றுக் கொண்டது மட்டுமே தெரிவிக்கப்பட்டிருப்பதால், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறத் துறையின் ஆணை முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை ஆணையர் நிலையில் ஒருவரை நேரிடையாக கள ஆய்வு செய்ய பணிக்குமாறும், அக்கள ஆய்வின் அறிக்கையின் அடிப்படையில் உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. சாஜாகுணா,
எண் 1/1 கங்கையம்மன் காலனி,
2வது தெரு, வடபழனி, சென்னை–600 026.

2) ஆணையர்,பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

3) மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையர்,
மண்டலம் 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 61, பேசின் பாலம் சாலை, சென்னை–600 021.

4) கண்காணிப்பாளர், மழைநீர் வடிகால் துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032

8/7/25
செயலாளர்.

8/7/25